www.padippakam.com



# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

# ஈழத்தவர் வரலாறு

5

எனவே சிங்ஹல விஜயனே, இலங்கையின் அடையாளங் காணப்படும் முதலாவது மன்னனாக முடிபுனைந்து கொண்டான். முடிசூடிக் கொள்ளுமுன் தென்னிந்தியாவின் பாண்டி நாட்டிலிருந்து தனது அரசியாகப் பாண்டிய இளவரசி ஒருத்தியையும் தனது எழுநூறு தோழர்களுக்கும் எழுநூறு பாண்டிய இராச்சியப் பெண்களையும் வரவழைத்துக் கொண்டதாக மகாவம்சம் கூறுகிறது. சிங்கள நவீன வரலாற்றாசிரியர்கள் விரும்புமாப் போல் விஜயனும் அவனது தோழர்களும் இந்தியாவின் வடபுலங்களிலிருந்து இலங்கையில் குடியேறினர் எனக் கொண்டாலும் அவர்கள் வரும்போது இத்தீவில் இருந்தவர்களும் அவர்கள் வந்த பின்னர் வருவிக்கப்பட்டவர்களும் திராவிடர் என்பது நினைவிற் கொள்ளத் தக்கது. பாண்டிநாட்டு இளவரசியுடன் வந்த 700 தோழியரும் விஜயனின் 700 நண்பர்களை மணந்ததாக மகாவம்சம் கூறும் செய்தியை நோக்கும் போதும் இவர்களே இந்நாட்டின் நாகரிக கர்த்தாக்கள் எனப்பாளி நூல்கள் கூறுவதை அவதானிக்கும் போதும் ஆதி ஈழத்து நாகரிக வரலாற்றில் தமிழ் மக்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் புலனாகின்றது.

## நாகசிற்றரசுகள்

இயக்ககுழுக்கள் தமக்குள் பகைத்துக் கொண்டு பிரிவுற்று நின்றதால் தென்னிலங்கை சிங்ஹல விஜயனிடம் பறிபோனது. ஆனால் அவர்கள் வடக்கே நாகதீபத்தைக் கைப்பற்றவோ அங்கு தமது குடியேற்றங்களை நிறுவவோ இயலாது போய்விட்டது. விஜயன் கி.மு. 483 இலிருந்து கி.மு. 445 வரை இலங்கையின் மன்னனாக விளங்கினான் எனமகாவம்சம் கூறுகிறது. விஜயனின் வருகைக்கு முன்னரும் விஜயனின் காலத்திலும் ஆதிகால இலங்கையில் பல சிற்றரசுகள் இருந்துள்ளன என்று துணியலாம். ஏற்கனவே முதலத்தியாயத்தில் விபரித்தது போல தென்னிந்தியாவில் கி.மு. 1000 ஆண்டளவில் தோற்றம் பெற்ற திராவிட மக்களது பெருங்கற்காலப் பண்பாட்டின் தொல்லியற் சின்னங்களான ஈமத்தாழிகள், பிராமியக் கல்வெட்டுக்கள் இதனை நிரூபிக்கின்றன. இதுவரை கண்டறியப்பட்ட பிராமியக் கல்வெட்டுக்களில் வரும் பருமக (பருமகன்), கமனி, அய (ஆய்), வேள (வேள்) என்பன குறுநிலத்தலைவர்களையே குறிக்கின்றனவாம். இலங்கையின் ஆட்சிமையமாக அனுராதபுரத்தையே மகாவம்சம் முதலான பாளி நூல்கள் குறிக்கின்றன. அதே நூல்கள் அனுராதபுரத்திற்கு வடக்கேயும் தெற்கேயும் இருந்த சிறு இராச்சியங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளன. உதாரணமாக இலங்கைத் தீவின் வடபாகத்தில் கி.மு. 6 ஆம் நூாற்றாண்டில் நாகதிவு ( நாகதீபம்) எனும் ஓர் அரசு விளங்கியது. நாகதீவின் மன்னர்களாக மகோதரன், குலோதரன் என்போர் விளங்கியுள்ளனர். நாகதீபத்தில் சிறப்பான சிற்றரசுகளாக கோகர்ணம் (திருகோணமலை), மகாதித்த (மாந்தை), மணிபல்லவம் (நயினாதீவு), நாவலந்தீவு (வலிகாமம்), கரியாலை, நாகபடுவான் முதலியன விளங்கியுள்ளன. திரிகூடம், இலங்காபுரி, கோகர்ணம் எனப் பல பெயர்களால் திருகோணமலை அழைக்கப்பட்டு வந்துள்ளது. மாந்தை என்று புகழ் பெற்ற மாதோட்டம் மன்னாரிலுள்ளது. விஜயனின் அரசியும் 700 தோழிகளும் வந்திறங்கிய துறைமுகமாக மாந்தை குறிப்பிடப்படுகின்றது. பாளி நூல்கள் இதனை மாதித்த (மகாதீர்த்தம்) என அழைக்கின்றன. மகாதித்த என்றால் பெருந்துறை எனப் பொருள்படும் எனச் சிற்றம்பலம் கருதுவார். மணிபல்லவம் பற்றிய சிறப்புக்கள் தமிழிலக்கிய நூல்களில்



குறிப்பிடப்பட்டுள்ளன. வளைவணன் என்ற நாகமன்னன் ஆண்ட நாடு இதுவென அறியப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் இன்றைய வலிகாமம் பகுதி முன்னர் ஜம்பத்தீவு என அழைக்கப்பட்டது. ஜம்புத்தீவு என்றால் தமிழில் அதனை நாலந்தீவு எனலாம். தீவு என்ற பெயருக்கேற்ப வலிகாமம் முன்பு நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்தது. கிழக்கே உப்பாற்றையும் தொண்டமானாற்றையும் பிரித்து காலகதியில் நிலமேடு ஒன்று தோன்றியது என்பதைப் புவிச்சரிதவியல் அடிப்படையில் நிறுவமுடியும். இந்த நாவலத்தீவிலேயே மகாவம்சம் குறிப்பிடுகின்ற ஜம்புக்கோளப்பட்டினம் என்ற துறையுள்ளது. இதனூடாகவே சங்கமித்தை வெள்ளரசுக்கிளையுடன் ஈழம் புகுந்தாள். இன்றைய வன்னிப் பெரு நிலப்பரப்பில் அமைந்துள்ள பூநகரிப் பிரதேசக் கரியாலை , நாகபடுவான், நாகபடுவான் வில்லு, குருந்தன் குளம் முதலான பகுதிகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் புகழ் பெற்ற குடியேற்றங்களாக விளங்கியுள்ளன. பூநகரியில் அண்மையில் நிகழ்ந்த தொல்லியலாய்வுகள் இதனை நிரூபிக்கும் சான்றுகளைத் தந்துள்ளன. எனவே விஜயனின் ஆட்சிக் காலத்திலும் அதற்கு முன்னரும் நாகதீபம் என்றழைக்கப்பட்ட வடபிரதேசத்தின் பல குறுநில அரசுகள் இருந்திருக்க வாய்ப்புண்டு என்று துணியலாம். தாமிரபர்ணிப் பிரதேசம் அடங்கிய தென்னிலங்கை ஆள்புலத்தை விஜயன் கி.மு. 483 இலிருந்து கி.மு. 445 வரை ஆண்டான். அவனுக்குப் பின் பண்டுவாசுதேவா (கி.மு. 444 - 414), அபயன் (கி.மு 414 - 394) , பண்டுகாபயன் (கி.மு. 377 - 307) , முத்துசிவன் (கி.மு. 307 - 247 ) ஆகிய மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். அதன் பின்னர் ஈழத்தின் புகழ் மிக்க மன்னனான தேவநம்பிய தீசன் (கி.மு. 247 - 207) அரச கட்டிலேறினான்.

## தேவநம்பியதீசன்

ஈழத்தின் வரலாற்றுக் காலம் தேவநம்பிய தீசனின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றது. அனுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு இம்மன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒற்றையாட்சி அமைப்பு வட , கிழக்கு மாகாணங்கள் உட்பட ஈழம் முழுவதும் அனுதாரபுர அரசின் இறுதிக்காலம் வரை (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை) நீடித்திருந்தது எனப் பாளி நூல்கள் எடுத்தியம்புகின்றன. ஆனால் பாளி நூல்களை நுணுகி ஆராயும் போது வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் பல சிற்றரசுகள் காணப்பட்டதாகத் தெரிகிறது. இத்தகைய சிற்றரசுகள் பல நாடளாவிய விதத்தில் காணப்பட்டதை பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. தேவநம்பிய தீசன் காலத்தில் இலங்கையின் வடபெரும் பகுதி உத்தரபிரதேசம் என்றும் தென்பெரும் பகுதி தக்கண தேசம் என்றும் வழங்கலாயிற்று. நாகதீவு என்ற பெயர் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குரியதாக ஆள்புலச் சுருக்கமடைந்தது. தேவநம்பிய தீசன் காலத்தில் பல சிற்றரசுகள் வடக்கேயும் தெற்கேயும் நிலை பெற்றிருந்தாலும் அவை அனுராதபுர மன்னின் ஆதிக்கத்தை ஏற்றிருந்தனவென உணர முடிகின்றது. தேவநம்பிய தீசன் காலத்திலேயே இந்தியாவிலிருந்து பௌத்த மதத்துாதுவர்கள் இலங்கைக்கு வந்தனர். அசோகனின் தர்மத் துாதை எடுத்து வந்த மகிந்ததேரர் வெள்ளரசுக்கிளையை எடுத்து வந்த சங்கமித்ததேரி முதலானோர் உத்திரதேசமூடாகவே இலங்கைக்கு வந்தனர். சங்கமித்ததேரி ஜம்புக்கோளப்பட்டினம் ஊடாகவே இலங்கைக்கு வந்துள்ளாள். அனுராதபுர மன்னனை நாடி வட இலங்கையூடாக நிகழ்ந்த வருகைகள் தடையின்றி நிறைவேற அப்பிரதேசமும் அனுராதபுர மன்னனின் ஆதிக்கத்திற்குள் இருந்திருக்கவேண்டும் எனக் கொள்வதில் தவறில்லை. எனவே தான் தேவநம்பிய தீசன் ஜம்புக்கோளப்பட்டினத்தில் லமுத்த - பண்ணைஸாலா என்ற மண்டபத்தையும் ஜம்புக்கோள விகாரையையும் கட்டுவிக்க முடிந்தது. தேவநம்பிய தீசன் காலத்தில் தென்னிலங்கையில் பல சிற்றரசுகள் காணப்பட்டுள்ளன. கல்யாணி (களனியா) உதிய என்பவனின் அரசாகவும் உரோகணைப் பகுதியில் (காஜரகமம்), சண்டனாகம ஆகிய விடயங்கள் சத்திரிய வம்சத்தினரின் சிற்றரசுகளாகவும் விளங்கியுள்ளன. காஜரகமத்தைக் கதிர்காமம் என கெய்கரும் சண்டனாகமத்தை கல்லோயப் பகுதி என சிற்றம்பலமும் இனம் காண்பர். கிழக்கிலங்கையில் சேருவில, சோம ஆகிய இடங்களில் முறையே சிவ, அபய என்போரால் ஆட்சி செய்யப்பட்ட இரு சிற்றரசுகள் இருந்துள்ளன எனப் பிராமிக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது. இச்சிற்றரசுகள் தமிழ்க்குறுநில மன்னர்களுடையனவாம். எவ்வாறாயின் இலங்கையின் பெருமன்னனாகத் தேவநம்பிய தீசன் விளங்கியுள்ளான். ஈழத்து வரலாற்றில் பௌத்த மதத்தைக் கைக்கொண்டு தன் மக்களையும் பௌத்தத்தையும் தழுவ வைத்தமையால் புகழ்ந்துரைக்கப்படுகின்றான்.

## சேனன் , குத்திக்கன்

தேவநம்பிய தீசன் வலிமை மிக்க மன்னனாக விளங்கியமையினால் நாட்டில் அமைதி நிலவியது. அதனால் பௌத்த மதம் நாடெங்கும் பரவ முடிந்தது. நாகதீவிலும் (யாழ்ப்பாணக் குடாநாடு) பௌத்தம் பரவியது. தமிழ்ப்பௌத்தர்கள் உருவாகினர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கந்தரோடையில் காணப்படும் பௌத்த சின்னங்களும்



வல்லிபுரப் பகுதியில் கிடைத்த பௌத்த சின்னங்களும் நாகதீவில் தமிழ்ப் பௌத்தர்கள் இருந்தமையை பறைசாற்றுகின்றன. கந்தரோடையில் கிடைத்த பிராமி எழுத்துக் கொண்ட பாத்திரமொன்றில் 'ததஹ - பத' - தத்தவின் பாத்திரம் என்றும் , இன்னொன்றில் 'குணி' என்றும் குறிப்புள்ளது. தேவநம்பிய தீசன் காலத்தில் தமிழ்ச்சிற்றரசுகள் திறை செலுத்தி வந்தன என ஊகிக்கலாம். இம்மன்னது கட்டளைக்கு கீழ்ப்படிந்து இருந்தன. கதிர்காம, சண்டானகமச் சத்திரிய மன்னர்கள் தேவநம்பிய தீசன் பணிப்பை ஏற்று புனித அரசமரக்கிளை நாட்டல் விழாவில் கலந்து கொண்டுள்ளனர். அரசமரக் கிளைகளை தத்தமது அரசிலும் நாட்டியுள்ளனர். கல்யாணிப் பிரதேச சிற்றரசு தேவநம்பிய தீசனின் சகோதரன் (உதிய) என்பவனால் கைப்பற்றப்பட்டது. காஜரகம், சண்டனாகமச் சத்திரிய மன்னர்களைத் தேவநம்பியதீசனின் சகோதரன் மாகாநாதன் அழித்துத் தனதாட்சியை நிறுவியுள்ளான். இவற்றிலிருந்து தேவநம்பிய தீச மன்னனின் ஆதிக்கவிரிவு புரியும். நாகதீவு (யாழ்ப்பாணக் குடாநாடு) இந்த மன்னனின் ஆதிக்கத்தை ஏற்றிருந்தபோதிலும் உத்தரதேசத்தின் குறுநில மன்னர்கள் சிலர் இதனால் வெறுப்படைந்திருக்கவேண்டும். அனுராதபுர மன்னனின் ஏகாதிபத்தியச் செருக்கும் அதற்கு மேலாக இந்துக்களாக விளங்கிய உத்திரதேசத்து மக்களைப் பௌத்தராக்கும் முயற்சியால் நாகதீவு மக்களில் ஒரு பகுதியினர் பௌத்தராகியமையும் வெறுப்பினை ஏற்படுத்தியிருக்கவேண்டும். இந்துவாக விளங்கிய தேவநம்பிய தீசனின் வல்லாதிக்கத்தை ஏற்கமுடியாது போனது. அவ்வாறு கிளர்ந்தவர்களில் சேனன், குத்திக்கள் என்ற இரு சிற்றரசர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தேவநம்பியதீசனின் மரணத்தின் பின்னர் பல தசாப்தங்களாக வடவிலங்கையைத் தம்மாதிக்கத்தின் கீழ் வைத்திருக்கச் சிங்கள மன்னர்களால் முடியவில்லை. மயூரசாம்ராச்சியத்தின் மாமன்னன் அசோகனின் படைப்பலமும் செல்வாக்கும் தேவநம்பியதீசனுக்கு இருந்ததால், தேவநம்பியதீசன் கால உத்திரதேசத்துக்கு குறு நில மன்னர்களும் உரோகணப் பிரதேசச் சிற்றரசர்களும் அனுராதபுர மன்னனின் ஆணையை ஏற்றிருந்தனர். தேவநம்பியதீசனின் மரணத்தின் பின்னர் இந்நிலையில் மாற்றம் காணப்பட்டது. தேசவநம்பியதீசன் பௌத்த மதப் பரவலிற்கும் விகாரைகளைக் கட்டுவதிலும் தன் செல்வத்தில் பெரும் பகுதியைச்செலவிட்டான். இராணுவப் படைப்பலத்தை பெருக்குவதில் கவனம் செலுத்தவில்லை. அதனால் இந்த மன்னனின் மறைவின் பின்னர் உத்தரதேசத்துத் தமிழ் மன்னர்கள் அனுராதபுர அரசின் ஆணையை ஏற்காததோடு அனுராதபுரத்திற்கு எதிராகத் தண்டெடுக்கவும் தலைப்பட்டனர்.

(தொடரும்)

-செங்கை ஆழியான்-

படிப்பகம்